# ஆதி மார்க்க னீதி மொழி

**January 2026**

*இதழ் 54 – ஜனவரி மாதம் 2026 வெளியீடு*
*© AMNA Trust, Chennai*



## மூலமந்நிரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்ஙோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்ஙல்ப மந்நிரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்நு மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்நு ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்நு தேவப்பிறப்பிலே பிறந்நு ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே! எதார்த்த நன்மன சற்சன மக்களே !

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்துடன் ஆதி மார்க்க னீதி மொழியின் மின்னணு சஞ்சிகை, 2025ஆம் வருட நிறைவுடன் 54ஆவது இதழாக 13 அவை மற்றும் 4 இசை வகுப்பு நிகழ்வுடன் இரத்தினச்சுருக்கமாக உங்கள் முன்பு மலர்ந்து விரிந்து அறிவு மணம் கமழ்ந்து கொண்டிருப்பது சத்தியம்.

இதில் பொதிந்துள்ள காரண காரியங்கள் யாவும் ஜென்ம சாபல்யத்தை நோக்கிய ஒரு பயணமாகும். பூமியின் சுழற்சியால் ஏற்படும் சூரியனின் உத்திர மற்றும் தட்சிண திசை பயணம் உணர்த்துவது யாதெனில், காலத்திற்கு உட்பட்டு வாழ்கின்ற மனித இனம் காலம் கடந்து நிற்கின்ற பொருளின் ரகசியத்தை அறிந்து உத்திர மேல் திசையில் வீற்றிருக்கும் இறைவனை நோக்கிய புண்ணிய பயண காலத்தைக் குறிப்பதாகும். மனிதனுக்கு மெய்ஞானம் எவ்வளவு அவசியம் என அறிவுறுத்தும் காலமே உத்ராயணம் மற்றும் தட்சிணாயணம்.

இத்தனை தேவ ரகசியங்களும் நமது ஆதி மார்க்க னீதி அவையின் ஒவ்வொரு நிகழ்விலும் மிக விஸ்தாரமாக பகிரங்கமாக பிரத்தியட்சமாக வேத சாட்சியுடன் அரங்கேறி வருகிறது. இதன் அடிநாதம் ஒவ்வொருவரிடமும் நிரூபணையாக வாழ்வியலாக வாழ்க்கையாக ஆக்குகின்ற அரும் பெரும் திருச்செயலாக இன்றும் நமது அவையில் நடந்தேறி வருவது சத்தியம்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஆசீர் பாதத்துடன் நாழியோர் மேனியும் கடிகை ஓர் வண்ணமுமாக ஆதி மார்க்க னீதி அவையின் ஆலய நிர்மாணம் வாலைத் தாய் சன்னதி முன்னிலையில் சீர் சிறப்புடன் நடந்தேறி வருகிறது. நம்மால் முடியுமா என்ற நிலை மாறி நம்மாலும் முடியும் என நம்மை ஆக்கி வைத்துக் கொண்டிருக்கும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி வணங்கி என் மக்களும் உலக மக்களும் இம்மின்னணு சஞ்சிகையைப் பார்த்துப் படித்து பலனடைய வாழ்த்துகிறேன்.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai 

*ஒருவன் தான் படிக்கிற அளவைவிட அதிகமாகப் பேசவேண்டும். இல்லாவிட்டால், அதுவே அவன் ஜீவனில் களையாக மண்டிவிடும். தொனியை அதிகமாக மெய்ச் செயலில் செலவு செய்கிறவனே, ஜீவன் முக்தனாகிறான்.*

*எம்மைத் தரிசிக்கும்போதெல்லாம் உன் வாய் ஏதாவது ஒரு மந்நிரத்தை உரக்கச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லாவிட்டால், அது உன் உயிரைப் பற்றுகிற பாவமாக னாளடைவில் விளைந்நுவிடும். னிஜமா முத்தி கிட்டவேண்டுமென்றால், உளம் கலங்ஙிக் கண்ணீர் கதகதவென்று கொட்ட உன் வாயில் மந்நிரம் வெளியாக வேண்டும்.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2025 டிசம்பர் மாதம் அவை நிகழ்வுகள் – 2026 ஜனவரி மாதம் வெளியீடு

## 03-12-2025 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## கார்த்திகை தீப சிறப்பு அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அந்ந னாளில் அணைத்தெனை யாட்கொண்டு...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் இருந்து வெளிப்பட்ட ஆறு தீப்பொறிகள் விழுந்த இடமே சரவணப் பொய்கை. அதுவே ஆறு குழந்தைகளாகி கார்த்திகை பெண்களால் வளர்க்கப் பெற்று அவர்களை சக்தி தாயானவள் ஒன்றாக இணைத்து உலகுக்கு அருளிய ஒருமுகம் ஆன ஆறுமுகன். இத் தத்துவ ரகசியத்தை குருவின் பேரருளால் நம் மூன்றாவது கண் திறக்கப் பெற்று அறிவுருவாக வாழும் காலத்தில் அறியலாம். சுடாத தீயாக, புகையாத கனலாக அருட்பெருஞ்ஜோதியாக மனுத்தலைக்குள் பிரகாசிக்கின்ற கார்க்கும் தீயின் உன்னதத்தை உணர்த்தும் நகல் அடையாளமே திருவண்ணாமலையில் ஏற்றப்பெறும் மகா தீபத் திருவிழாவாகும்.



**கோடாயிதக்கூர் - வாக்கியம் 92 :** பிறப்பெடுத்த கணமே சாவு எனும் பாவ இருளானது விதியெழுத்தாக நம் தலையில் விதிக்கப் பெறுகிறது. மதி வல்லாராக வரும் குருநாதர் தன் ஞானத் தீச்சுடரால், சிவன் எனும் வாடாத தீபத்தை நம் சித்தத்தில் ஏற்றி, விதி எழுத்தை துடைத்து மதி எழுத்தை பதிப்பித்து சிரஞ்ஜீவி பட்டத்தையும் சூட்டி வைக்கிறார்கள்.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* அபரகேந்தி, அம்பா, துலா, மேகேந்தி, வர்தயேந்தி, நிதர்த்தனி எனும் அறுவரே கார்த்திகை பெண்களாக சக்தி வடிவாகி ஆறாவது அறிவாகப் பிரகாசித்து நித்தம் நம்மை காக்கும் அணையா ஜோதியாகும். குருபிரான் தனது சொல்லக விளக்கெனும் ஜோதியால் காட்டும் ஆதியும் அந்தமும் இல்லாத தோற்றமிலா வெளிச்சப் பொருளை, அவர் அருளும் தெய்வீகக் கண் கொண்டு நாம் தரிசித்தால் எமனின் வல்லபத்தை மிதித்து சிவராஜனாகிய இறை பொருளுடன் இரண்டறக் கலந்து இன்புற்று வாழலாம்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 06-12-2025 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

தன்னை சிவமாக்கும் அன்பு இன்னதென அறிந்து புற நோக்கை விட்டு அகமுக தரிசனம் பெற்றவர்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள். தீபம் உணர்த்தும் நெருப்பின் சிறப்பை அறிந்த நமது மக்கள் கார்த்திகை மாதம் முழுவதும் வீட்டில் தீபம் ஏற்றுவது மிகுந்த சிறப்பைத் தரும். பற்றற்றான் மீது நாம் வைக்கும் பற்று ஒன்றே நம்மை சிவமாக்கும்.

**கோடாயிதக்கூர் - வாக்கியம் 227 :**
சிவ மதத்தில் உள்ள வாசகமே அன்பே சிவம். மனிதன் அழிந்து போகிற பொருள் மீது தான் அன்பு வைக்கிறான். சிரஞ்சீவி வாழ்க்கையை நித்தியமாக அளக்கின்ற சிவ செம்மலின் அன்பு ஒன்றே மனிதனை சிவமாக்கும்.

*ஜீவசகோதரர் கௌதம்:*
அவரவர் ஜீவன் மீது வைக்கும் அன்புதான் ஜீவகாருண்யம் என்பதே வள்ளல் பெருமான் வாக்கின் ரகசியமாகும். குருபிரான் நம் மீது வைக்கும் மெய் அன்பினால் மட்டுமே நாம் ஜீவன் கண்ட ஜென்ம சாபல்ய குலத்திற்கு உரியவராக முடியும்.

*ஜீவசகோதரர் கோபி:*
கைபேசியை கவனமாக உபயோகிக்கும் முறை: ஒன் டைம் பாஸ்வேர்ட் (OTP), முன் பின் தெரியாத அழைப்பு, மோசடி குறுஞ் செய்திகள், டிஜிட்டல் கைது, பொது இடங்களில் கைபேசி தவிர்த்தல், இலவச வலைத்தளம், பொது இடங்களில் சார்ஜ் செய்தல், வியாபார தலங்களில் கைபேசி எண்களை பகிர்தல், இவைகளில் மிக மிக அதிக கவனம் தேவை.

**வேதாகமம்: யோவான் சுவிசேஷம் அதிகாரம் 4, வாக்கியம் 8,12,13:**

*ஜீவசகோதரர் குமார்:*
அகமிய அன்பே இறைவனிடம் சேர்க்கும். அனித்திய உடல் கடந்து அனுபவிப்பதே பேரின்பம். அவரவரின் அன்பெனும் பொருளாகிய ஜீவனுக்கு பாத்திரமாக ஒழுக்கமுடன் இருக்க வேண்டும். அன்பே உலகை ஆளும் பசை, ஞானத்தின் விதை, உயிர்களின் காவலன், இறைவனின் வடிவம் என்கிறார் திருவள்ளுவர். அன்பு துன்பத்தை வெல்லும் சக்தி என பௌத்தமும், அளவிலா அன்பும் கருணையும் என இஸ்லாத்திலும், அன்பே கடவுளின் இருப்பிடம் என சீக்கிய மதத்திலும், உன்னைப்போல் அயலானையும் அன்பு செய் என யூத மதத்திலும் அன்பின் மேன்மை கூறப் பெற்று உள்ளது. கடவுள் நிலையறிந்து அம்மயம் ஆகும் உளவை அருளும் குருவின் அன்பு ஒன்றே னம் பிறவிப் பிணி தீர்க்கும் அருமருந்தாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai

## 07-12-2025 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பரிசுத்த ஆவித்தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய, **ஆறிரு சமயத்திற்கும் அறிவுரை தெய்வமாகி...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரி லாவண்யா:* அனைவரிடமும் ஒன்றே ஒன்றாக உள்ள ஜீவனை அறிய விடாமல் தடுப்பது அவரவரின் மனமே. அதை அறிவாக மாற்றும் ஆசானின் ஓங்கார நாத தொனியே இதயத்தில் விளங்கும் இறைவனை தரிசிக்கச் செய்து மரணமிலாப் பெருவாழ்வு அருள்கிறது. தேவ யோனியில் மறுபிறப்பு பெற்ற பின்னர் தான் பிறவாமை கை கூடும்.

*ஜீவசகோதரி ஹேமலதா:* சர்வ படைப்புகளும் விரும்புவது துக்க நிவர்த்தி சுகப்பிராப்தியே. ஓர் எதார்த்த தேவகுருவிடம் தஞ்சம் அடைந்த பின்னரே தூய ஞானச்சுடரை நம்மிடம் ஏற்றி நாம் யார் என அறியச் செய்கிறார்கள். மனமது செம்மையானால் மந்திரஞ் செபிக்க வேண்டா, வாயுவை உயர்த்த வேண்டா, வாசியை நிறுத்த வேண்டா, மந்திரஞ் செம்மையாமே என்கிறார் அகத்தியப் பெருமான். ஆசான் அருளால் அரிதுயில் பழகி அனுபவிப்பதே பேரின்பம்.

*ஜீவசகோதரி ரேவதி:* கங்காளன் பூசும் கவசத் திருநீறே நம் வினை தீர்க்கும். நிர்க்குண நிலையில் இருப்பதே சைவம். அதுவே இறைவனின் நிலையும் ஆகும்.

*ஜீவசகோதரர் சீனிவாசன்:* சிலை வழிபாடுகளும் புறச் சடங்குகளும் நகல் என்பதை ஆசான் அருளால் அசலை அறிந்த பின்பே உணர முடியும். வீண் மக்களை விண் மக்களாக மாற்றும் வல்லவரே குருபிரான்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* அனுபவக் கல்வியே அறிவைக் கூராக்கும். உணர்ச்சி உணர்வாகி மெய் உணர்வாக மாறச் செய்வதே குருவின் அருளமுதம். மனது அறிவின் வழி பற்றி ஓடி உடல் கடந்து உயிர் வழி பற்றி ஆத்ம வீடடையச் செய்வதே மெய்க் கல்வி.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 11-12-2025 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **தேகம்னம்போ லுள்ளளம்குரு னாதருக்கு னாமமெதும்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

கற்றதின் பயன் நற்றாளகிய ஜீவனைக் கண்டு ஜென்ம சாபல்யம் பெறவே. குருவின் அருளால் நமது நெற்றிக் கண் திறக்கப் பெற்ற பின்னரே கோவில்களின் தத்துவ ரகசியம் உணர முடியும். தேகப் பற்றை விடுவதே புலால் மறுத்தல் ஆகும். சர்வ மூல மந்திரங்களையும் அவரவர் உள்ளத்தில் நிரூபணை செய்பவரே குருபிரான். பாழில் மனதை விடாது அறிவுத் தெளிவு பெறச் செய்வதே பிரம்ம வித்தையாகும்.



Copyright © AMNA Trust, Chennai 

**திருமெய்ஞானக் கொரல் வாக்கியம் 9 தொடர்ச்சி: குருபிரான் அருளமுதம்:**
சாவரு முன் சாகப் பழகும் சன்மார்க்க செயலே னீதி மார்க்கமான ஆதி மார்க்கம். குருனாதர் உளவின்படி யோகம் பழகி அமரர்கள் தாங்கள் வாழும் காலத்தில் பெறுவதே அடக்கம். காலத்தின் ரகசியத்தை அறிவதே ஞானத்தின் உச்சமாகும்.

**அறிவு அறி பாடம் - குருபிரான் அருளமுதம்:**
உயிர், மதி, இன்னதென அறிந்து வாழ்வதே உடம்பின் நற்பலன். சூக்குமமான மூலாதாரத்தை குருவருளால் அறிந்து மும்மலம் கருகச் செய்து சாவிற்கு எட்டி தீ வைப்பவனே ஜாதி மான். பத்து வயதான கன்னியின் ரகசியமே தமிழாகும். உலகில் உள்ள யாவருக்கும் தன் ஜீவனை அறிய வைக்கும் சாலைத் தமிழ் அவசியம் வேண்டும்.

*ஜீவசகோதரர் சங்கர்:* வரம்பிலா மெய்ஞ்ஞானத்தை வரமாக நம் தலையில் ஏற்றி அறிவிருக்கும் தலம் அறிந்த மேன்மை மிகு மக்களாக்கும் அரும்பெரும் செயல் உள்ள இடமே ஆதி மார்க்க னீதி அவை ஆகும்.

பரிசுத்தஆவி தெய்வத்தின் திருவடி போற்றி ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 13-12-2025 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அரியருள் வருகும் அருமறை விதியோன்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
காலமற்ற இடமே பாவ விமோசனக் கோட்டை ஆகும். ஆசான் அருளால்தான் ஒவ்வொருவரும் தம் உணர்ச்சியில் இருந்து உணர்வில் விழித்தெழுகின்றனர். அறியாமையின் உச்சமே ஜாதி துவேஷம். தன்னை அறிந்து சிவமான ஜாதியே உயர்ந்த ஜாதி.

*ஜீவசகோதரர் சங்கர்:* ஐம்புலனையும் ஆட்சி செய்யும் ஜீவனைக் கண்டு தரிசித்தால் அதுவே ஜென்ம சாபல்யம். உயிரான பிராணன் வீணாகாமல் தேக்கும் செயலே பிரணாயாமம். சார்ந்ததின் வண்ணமாக மாறும் மனமே அசைவமாகவும், சார்ந்ததின் வண்ணமாக மாறாத அறிவே சைவமாகவும் உள்ளது.

**கோடாயிதக்கூர் வாக்கியம் 228 :** இறைவன் பூமியை படைத்தது போன்றே மனித தேகமும் படைக்கப் பெற்றது. பூமியின் தலைவே நமது தேகத்தின் தலைவு ஆகும்.

**வேதாகமம்: மார்க் – அதிகாரம் 12 வாக்கியம் 41 to 44:**
*ஜீவசகோதரர் குமார்:* தன்னை அர்ப்பணிக்கும் மெய்ஞ்ஞான நிலையே உண்மையான காணிக்கை. அறிவுப் பசியே பசியாகும். அறியாமை நீக்கும் அறிவு தானமே தர்மம் ஆகும். ஆசானை அனன்னியமாக நினைப்பவர்க்கே பிரம்மவித்தை கைகூடுகிறது. முப்பொருள் தத்தம் செய்தே நீதி எனும் பொருளைப் பெற முடியும்.

*ஜீவசகோதரர் கோபி:* அறிவை உபயோகிக்கும் விதம் அறிந்து அதன்படி நடப்பதே நாகரிகம். கைபேசி மூலம் நடக்கும் மோசடிகளில் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அதுபோல் அதை உபயோகிக்கும் இடமறிந்து பேசுவதே நாகரிகம். வாகனம் ஓட்டுகையில் கைபேசியை கட்டாயம் தவிர்க்க வேண்டும். கைபேசிக்கு அடிமையாகாமல் இருப்பதே அறிவின் லட்சணம்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் கௌதம்:* நமது பிறப்பு இறப்பின் ரகசியம் தெரியாமல் வாழ்வதே மிகப்பெரிய அறியாமை. உற்ற நண்பன் போல் கூடவே இருந்து பிறவிச் சுழலில் நம்மை சிக்க வைப்பது மனமே. அதிலிருந்து நம்மை விடுவித்து பிறவா நெறியில் புகுத்துபவரே பிறவா முதல்வன்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 14-12-2025 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **திருவளர் திருவே ஷெய்குகள் ஷெய்கே…** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவசகோதரி பிரபாவதி:*
குருவை சந்தித்த பின்னரே நகலாகிய அறியாமை அகன்று அறிவாகிய அசலை அறிகிறோம். ஆன்ம ஒளியை மறைக்கும் மாயத் திரைகளை விலக்கி மும்மூலம் தீர்க்கும் மருந்தே குருவின் நாதம். பிறவாமை பெற மனிதன் வாங்கி வந்த சீதனமே அமானிதம் .

*ஜீவசகோதரி சரஸ்பதிவண்ணன்:*
1 முதல் 6 அறிவு வரை சர்வத்திலும் உள்ள இறைவனை அறியாமல் இருக்கும் நரன் ஓர் மெய் குருவை சரணடைந்தே இறைவனை அறிய முடியும். குரு அருளும் யோகத்தின் மூலம் பல படிகள் கடந்து வேத சாட்சியாகப் பெறும் சிவ அனுபவமே ஞானம்.

*ஜீவசகோதரி பாரதிஜயர்:*
சிவசக்தி சேர்ந்த வடிவே அர்த்தநாரீஸ்வரர். மெய்ஞ்ஞானம் பெற்ற பின்பே காளிதாசரின் அஞ்ஞானம் அகன்று மகாகவி ஆனது போல் உயிராகிய ஜீவ சக்தியை குருவருளால் அறிந்த பின்னரே அஞ்ஞானம் விலகும். அவரவருள் சரணாகதி அடைவதற்கான ஒன்றே மெய் வணக்கம். குருவின் அருளால் சிவ அனுபவம் பெற்று தெய்வ நிலைக்கு உயர்வதே மரணமிலாப் பெருவாழ்வாகும்.

*ஜீவசகோதரர் மகாலிங்கம் பவானி:*
புறச்சடங்கில் சிக்கிய மனித வாழ்வு நிலையற்ற ஒன்றாகும். ஆதியும் அனாதியுமாக விளங்கும் அறிவை அறிய ஆசான் அருள் வேண்டும். தன்னை உணர்ந்தவனே பிறரையும் உணர்த்த வல்லவன். தன்னை உணரச் செய்யும் செயல் உள்ள இடமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரர் அருண்:*
ஜீவனைக் குறித்தே சர்வ வேதங்களும் உள்ளன. குருவின்றி ஞானம் இல்லை. நிரந்தரம் அற்ற உலக வாழ்வில் நித்தியப் பொருளை அறிவதே மனுவின் கட்டாய கடமையாகும். நம்மை இயக்கும் ஜீவனே சர்வத்தையும் இயக்கும் சிவன் என உணர்வதே மெய் உணர்வு.

*ஜீவசகோதரர் மணிவண்ணன்:*
அலை ஓசை போல் பேசும் மனதை பேசாமல் இருக்கச் செய்பவரே மௌனி. அவரிடம் இருந்து வரும் சப்தமே மரணம் தீர்க்கும் மா மருந்தாகிய நாதம். அதுவே வேதம். அதன் வழியில் வாழ்வதே மெய் வாழ்வாகும்.

பிரம்மப்பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai

## 18-12-2025 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **தாகமும் தணியான் தன்னுயிர றியாத் தரித்திரக் கொடும்பதிதன்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவசகோதரர் சங்கர்:*
இகப் பொருள்களின் மீது இச்சை தீரும் போதே பிறவித் தாகம் தணியும். படிப்பதால் இறைவனை காணலாம் எனக் கூறுபவன் தரித்திரன். தன்னுயிரைக் கண்டு தரிசித்த மக்களே இறைவனிடம் காவற்பாடு பெறுவர்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் - வாக்கியம் எண் : 9**
மவுத்து என்பது சா வருமுன் சாகப் பழகும் செயலாகும். நிஜத் தொழுகை கை வரவு ஆனவர்க்கே கசப்பு தீட்டு வெளியாகாமல் இருக்கும். பரிசுத்தப் பிரயாணம் ஆனதின் பரிசுத்த அடையாளம் நிகழும் எல்லையே மெய்யான செயலுள்ள இடமாகும்.

*ஜீவசகோதரர் சங்கர்:*
மெய் குருபிரான் வாய்ப்பது எதார்த்தம் உள்ளம் கொண்டவர்க்கே. ஒருவரின் சாத்வீகக் குணம் மேலோங்கும் போதே குருதரிசனம் கிட்டுகிறது. பெரியோர்களின் பெருங் கருணையே பிறவாமைக்கு மருந்தாகும்.

**குருபிரான் அருளமுதம்:**
மனிதன் ஜீவன் கண்டு ஜென்ம சாபல்யம் பெறுவதற்காக வந்த ஆறாம் வேதமே ஆதி மெய் உதய பூரண வேதாந்தம். நன்மனம் கொண்ட மக்கள் யாவரும் வேதாந்த வேதங்களின் உட்பொருள் ஆதார உயிர்ப்பதிப்பை உணர்ந்து உன்னத வாழ்வு பெற உண்டான செயல் உள்ள இடமே ஆதி மார்க்க னீதி அவை என்ற ஆசீர்பாதத்துடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

## 20-12-2025 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

பிரம்மோதய சாலை ஆண்டவர்கள் அருளிய **வேதகலைக் கதிபதி...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவசகோதரர் கௌதம்:* அவதார புருஷர்கள் தோன்றுவது மக்களின் வினை தீர்க்கவே. சாயுச்யபதத்தில் நம்மை ஏற்றி வேத வழி வாழச் செய்து அசைவற்ற பரம்பொருளை அறியச் செய்பவரே ஆசான். மனிதனை பிரகாசிக்கச் செய்யும் பொருளே கோவில்களில் தத்துவ வடிவங்களாக உள்ளன. நம்மை சிவ நிலைக்கு ஏற்றும் இரண்டெழுத்து மந்திரமே குரு. நற்றாளைக் காட்டி அறிய வைக்கும் செயலுள்ள இடமே ஆதி மார்க்க னீதி அவை.

**கோடாயிதக்கூர் வாக்கியம் எண் - 228 :** சொர்க்க மத்ய பாதாளமாக இருப்பதே மூவுலகு. கடமாகிய இந்த கடத்துள் இருக்கும் கடவுளை அறிய நம் எண்ணம் புறத்தில் அலையாமல் இருக்க வேண்டும். இதனை அறியாமல் இருப்பதே அறியாமை.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* தனது கருணையால் நரனை மனுவாக மாற்றி ஐம்புல நுகர்வின் காரணப் பொருளே உலகு என அறிய வைப்பவரே குரு. அவரின் மேல் நோக்கான சொல்லே நம்மிடம் அழியாப் பொருளை அறிய வைத்து மெய் வாழ்க்கை வாழ வைக்கும்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **சத்தியவேதம் : மார்க் அதிகாரம் 13, வசனம் 32 - 35:** காலத்தின் ரகசியம் அறிந்தவரே அவதார புருஷர். காலத்தில் தோன்றி மறைவதே மனித வாழ்வு. ஆசானின் அன்பு நம் மீது சாயும் போதே நாம் பெற்று வந்த அமானிதக் கடனை அடைக்கவும் எமன் எல்லையில் வெற்றி பெறவும் இயலும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 21-12-2025 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அரியானை அறிய வைத்து...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவசகோதரி ஜெயாகௌதம்:* ஐம்புல நுகர்ச்சியால் கீழ்நோக்கிச் செல்லும் மனமே உடலின் ஆதாரம். அதனை மேல் நோக்கமாக மாற்ற ஆசானின் வாய்மையே துணையாகும். தன்னை அறியும் தவச்செயலை பழகித் தேறும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரர் குபேர்:* னீதி எனும் பொருளை, அறிய வைப்பதே ஆசானின் ஒரு மொழிக் கீதை. மூல மந்திரத்தை கண்டு சொல்லும் அறிவை அறிவிக்கும் இடமே ஆதி மார்க்க னீதி அவை. தோற்றமிலாப் பொருளைக் காண வைக்கும் பொருளே அதிசயம்.

*ஜீவசகோதரர் மஞ்சுனாதன்:* தன்னை அறியும் செயலுக்கு உண்டாக்கப் பெற்றதே கோவிலும் குளங்களும். மெய் பொய்யும் பிரித்துக் காட்டுவது வந்த வேதமாகிய ஆசானே. தேக ஆலயத்துள் இருக்கும் ஜீவனை தரிசிக்க குருவின் திருமுகத்தில் மறுபிறப்பு பிறக்க வேண்டும்.

*ஜீவசகோதரி மணிமொழி:* வள்ளலின் வாக்கே வான வேதாந்தச் சஞ்சீவியாகும். குருவின் வாய்மைக்கே மனிதனை உயிர்ப்பிக்கும் வல்லபம் உண்டு. நமது முக்குணம் நீக்கும் வல்லவரே நிர்க்குணா அலங்கிர்தர். செம் பொருளாகிய நீதியெனும் நடுப்பொருளை நம்மிடம் அறிய வைப்பவரே நடுநாயகம்.

*ஜீவசகோதரி கவிதாவெங்கட்:* ஒரு தலைமுறை காலம் நம்மை காக்கும் ஆறாம் அறிவை, சதாசிவத்தைக் காட்டும் சப்தத்தின் மூலமே அறிய முடியும். அறியாமை இருளை அகற்றுவதே கோடி சூர்யப் பிரகாசம். இறவாமையே சர்வ மதங்களின் அடிநாதம்.

*ஜீவசகோதரர் வெங்கடேசன்:* கசடு அறுக்கும் கல்வியே இல்மு. அதனைப் பழகி நம் ஆணவம் நீங்கும் போதே அறிவுத் தெளிவு உண்டாகும். மனுவைப் படைக்கும் குருவே நித்தியன். நித்தியமான நினைவே முக்திக்கு உரிய பொருளாகும்.



Copyright © AMNA Trust, Chennai 

## 24-12-2025 ~ புதன்கிழமை ~ நாயகன் இல்லம்
## ஜீவசகோதரர் சரவணகுமரன் 3ஆம் ஆண்டு பூர்த்தி சிறப்பு அவை
## தொகுப்பு: ஶ்ரீ. விஜயகுமார்

மெய்வழி ஆண்டவர்கள் அருளிய **அடங்க லொடுங்குமிடம்...** பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

செங்கமலத் தாயாம் சின்மயத்தின் பாதமாக நின்று விளங்குகின்ற அந்த ஜீவேசத்தகை வாழ்வினுக்காக வந்தோரே நாம் அனைவரும். ஆதி மார்க்க னீதி அவையின் சரவணநந்தவனம், மற்றும் ஜூம் காணொளி காட்சி இவற்றிற்கு வித்திட்டு நீங்குறா நேர்மையாளராகி நம் நினைவில் நிற்பவனே சரவணகுமரன். நம் அவையின் அங்கங்கள் யாவரும் நித்திய வைகுண்ட பதவிக்கு உரியவர்களே. வைகுண்டத்துள் முதலில் நுழையும் குருபிரானே நம்மையும் அங்கு அழைத்துச் செல்கிறார்கள். வாழ்ந்த காலத்தில் ஐந்து எழுத்து மந்திரம் இன்னதென அறிந்து செம்பொருள் செவ்வான செம்மேருவில் கலந்து விட்டவனே சரவணகுமரன். ஐம்புல நுகர்வுக்கும் சக்தி தரும் ஜீவன் ஒடுங்கும் இடமே கங்குல் பகலற்ற கூர்மமாம் குகை. நம் தசாபுத்திகள் செயலற்றுப் போவது பெரியோரின் வாய்மைக்குள் ஆழ்கின்ற நேரமே. தவத்தின் மேலான தவம் பெரியோரின் நினைவில் நாம் வாழ்வதே.



அவரவரின் பேரெடுத்து வடிவம் மாற்றி தன் பேர் வைத்து தன் வடிவம் தந்த உத்தம சுத்த உறுதி நாயகமே பஞ்சாட்சர மேனியாக வரும் ஜீவனாகிய சிவன் எனும் குருபிரான். இறந்தபின் வாழும் வாழ்க்கையை குறிக்கும் சடங்கே திதிகளும் பித்ரு பூஜைகளும். பிண்டம் புகுந்து இனி பிறவாமை என்பது வாழும் காலத்தில் நடக்கும் செயலாகும். குருவின் அருளால் சாமுன் சாகப்பழகி மனமெனும் நெருப்பாறு மயிர்ப் பாலம் தாண்டிச் சென்று அடைகின்ற இடமே கற்பக விருட்சத்தின் அடிநிழல் ஆகும்.

*ஜீவசகோதரர் கோபிநாத்:* எனது இகபர வாழ்விற்கு வழிகாட்டியாக இருந்தவன் எனது அண்ணன் சரவண குமரன். ஆதி மார்க்க நீதி அவையின் வளர்ச்சிக்கென அதிகமாக சிந்தித்து தன் தொழில் திறமையை அதில் புகுத்தியவன்.

*ஜீவசகோதரர் சிரஞ்சீவி:* தீர்க்கப் பார்வையும் திடநோக்கும் கொண்ட சரவணகுமரன் பெரியோரின் அன்புக்கு பாத்திரமாகி தன் தூல உடலை விட்ட பின்பு இன்று அறிவுடலில் குடியேறி பெரியோரின் நினைவில் என்னாளும் வாழ்கிறார்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 25-12-2025 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் திருவாய் மலர்ந்தருளிய **அண்டங்ங ளவனி யானவெப் பொருளும்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* அரியனின் இறை சூலில் சூட்சாதி சூட்சமாக அண்டங்கள் அவனி அடங்கியும், காலத்தின் வழியாய் அது விரிந்துள்ளதையும் குருவருளால் உணர்ந்தவனே மனு. அவரவருள் சரணாகதி அடைந்து ஐம்புலன்களுக்கும் தலைவனான மனதை குருவருளால் அறிவின் வசம் சேர்த்து பிரம்மவித்தை பழகியவனே அழியானிதி பெற்ற தேவன்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் வாக்கியம் - 9 :** சாலை ஆண்டவர்கள் 60 வருடங்களாக சொல்லியும் திருந்தாத மக்களை விட்டு மறலிகை தீண்டா மெய்மதத்தை உண்டாக்கி அதை சார்ந்த மக்கள் யாவரையும் மறலிகை தீண்டா மெய் ஜாதியில் மூமீன்களாக ஆக்கி உள்ளார்கள்.

*ஜீவசகோதரர் கௌதம்:* வைகுந்தம், பிரம்மலோகம், இதன் தத்துவப் பொருளை குருபெருமானால் திருவடி நிலை அறிந்தவர்களே அறிவர். குரு சொன்ன சொல் கேட்டு நடக்கையில் நல நாளாகவும், விட்டு விலகினால் காலனின் நாளாகவும் ஆகிறது. சாவருமுன் சாகப் பழகியவரே அடக்கம் மடக்கிப் பிடிக்கத் தெரிந்த மூமீன்.

*ஜீவசகோதரர் குமார்:* **சத்திய வேதம்:** பரிசுத்த ஆவி மூலம் கன்னி மரியத்தின் சூலில் வந்த அவதாரமே இயேசு பிரான். இதன் அகமிய ரகசியம் அவரவருள் ஆசான் அருளால் பத்து வயது கன்னியின் இருப்பிடம் அறிந்து மறுபிறப்பு பெற்ற ஜீவக் குழந்தையின் ரகசியமே ஆகும். இயேசுவின் இரத்தமாகிய குருதியே கர்த்தராகிய குருவின் வாக்குத் தீயாகும். பரலோக மன்னாவை செவி வாயிலாக அனுதினமும் புசித்தலே மரணத்தின் கூரை வென்று பாதாளத்தின் ஜெயமாவதற்கு வழியாகும். குருவருளால் மனம் திரும்பி நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன் எனும் திருவசனம் உணர்த்தும் அகமியச் செயலை தன்னையறிந்த மக்களே அறிவர்.

**குருபிரான் அருளமுதம்:** பசுவாகிய ஜீவனின் ரகசியம் அறிந்தோரே இயேசு பிரான் பசுக்கள் மேய்த்ததின் உண்மை நிலை அறிவர். மூன்றாம் நாள் உயிர்த்தெழும் ரகசியம் உணர்த்தும் திருனாளை குருவின் திருமுகத்தில் மறுபிறப்பு பெற்று ஆறாம் அறிவை அறிந்த மெய்யறிந்த மக்களே உணர்வர். ஐம்புலன்களுக்கும் வல்லமை அளிக்கும் உள்ஞானக் கண்ணே இயேசுபிரான் காட்டி அருளிய இருதயக்கனி என்பதாகும். சுயம் பிரகாசமான அறிவுப் பிரகாசத்தை அவரவருள் காணும் செயலே அவதாரத்தின் சிறப்பாகவும் உள்ளது.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை னிறைவானது.

## 27-12-2025 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்

பரிசுத்த ஆவித் தெய்வம் மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **எத்திய விருணீக் கத்திதக் கடலே...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவசகோதரர் கௌதம்:* மும்மூர்த்தி கரத்தால் எட்ட முடியாத இறைவனை, அது கடந்த ஒருவர் அருளும் அறிவை அறிந்த பின்பே நாம் எட்ட முடியும். குருவின் இரக்கம் கொண்டே நம் நித்திய பிரகாச உடலைக் காண முடியும். துவைதத்துள் இருக்கும் ஒரு பொருளாம் அத்வைத உத்தமப் பொருள் நம் கூட்டினில் நிஜமாக நாம் ஆசானின் அறிவுடன் கூட வேண்டும். குருவருளால் உச்சி வழி கண்டு ஊசித் தமர்வழி சென்று பாலமுதம் அருந்தியவர்க்கு இனி பிறப்பில்லை.



Copyright © AMNA Trust, Chennai

**கேடாயிதக்கூர் வாக்கியம் - 228:** பேரறிவின் முன் சிற்றறிவு கொண்டு நாம் கேள்விகள் கேட்பதும் பேசுவதும் அறியாமையே.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* நம் அகந்தை அழிந்தால் தான் பெரியோரை அடையாளம் கண்டு மெய் ஞானம் பெற முடியும். நம்பிக்கை எனும் ஆணிவேர் மூலமே நாம் சிவ அனுபவம் பெற முடியும். ஜீவனின் அசல் தன்மை பற்றி அருள்வதே பகவத் கீதை. சதா பிரம்மலயத்தில் இருக்கும் பெரியோர்களின் வாய்மையே நாள் தோறும் புதியவனாகிய இறைவனின் கஜானாவில் இருந்து எடுத்து அருளப் பெறும் அருளமுதம்.

**வேதாகமம்: ரோமன் - அதிகாரம் 2 வாக்கியம் 12,18 ; அதிகாரம் 7 வாக்கியம் 3.**

இஸ்ரவேல் மக்களுக்கு மோசே கொடுத்த சட்ட திட்டங்களின் தொகுப்பே நியாயப் பிரமாணம். பஞ்சமா பாதகங்கள், இணை வைக்காமை, இச்சியாதிருத்தல், விக்கிரக வழிபாடு செய்யாமை, ஜெபம் என்ற பெயரில் அற்ப வார்த்தையால் அலம்பாமை, கர்த்தரின் தயவால் ஓய்வு நாள் அறிந்து பரிசுத்தமாய் இருத்தல். மேற்கண்ட பத்து கட்டளைகளும் ஆசான் தயவால் அகமியத்தில் அறிந்து அதன்படி நடக்க நாட்கள் வரும் நாளெல்லாம் நல நாளாமே.

*ஜீவசகோதரர் சங்கர்:* அகமியச் செயல் பற்றி கூறும் ஆகமம் அறிந்தோரே ஆதி மார்க்க நீதி அவையின் அங்கங்கள். கோ எனும் இறைவனின் அந்தப்புரத்தை தரிசிப்பதே கோபுர தரிசனமும் பாவ விமோசனமும். கங்காளன் கவசத் திருநீறு பூசும் இடமாகிய நெற்றியே சதாசிவம். வினையின் தலைவனான மனதை வினை தீர்க்கும் விநாயகராம் குருவின் அருள் கொண்டு தீர்த்து பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருநாமத்தை அறிக்கை செய்யும் தகுதி உள்ள மக்களாக நாம் இருக்க வேண்டும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 28-12-2025 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **தனித்தனற் றலைமைப் பெரும் பதியரசை...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

ஞானத்திற்கு சுருக்கமான வழியான குருவின் சொல் கேட்டு நடந்து உயிர்க்கு அவசியமான ஒன்றைப் பெறவும், பேரின்பம் அனுபவிக்கவும், இறைவன் வழங்கியதே மனித தூலம். மனிதனிடம் உள்ள அமானித ரகசியத்தை, கலைகள் 64க்கும் மேம்பட்ட நயனக் கலை மூலம் அறிய, அறிவு, திடகவனம், வைராக்கியம், ஒழுக்கம் மிக அவசியம். ஆசான் அருளால் அறிவு சொரூபமாக மாறி அறியாமையுள் இருக்கும் அறிவை அறிந்து மயக்கம் தரும் மாயையை தவிர்த்து அறிவதே மெய்வழி. ஐம்புல நுகர்வின் காரணப் பொருளான உலகை அறியவும், ஆறாம் அறிவின் ஆதாரமான ஏழாம் அறிவு தீமைக்குச் செல்லாமல் காப்பதுமே நம் கடமை. நன்மை தீமைக்குக் காரணமான மனமான எமனை சிவனாக மாற்றி நசிகேதன் போல் எமன் எல்லையில் இருந்து மீள வைப்பதே கவனரச மந்திரம்.

*ஜீவசகோதரர் அஜய்கிருஷ்ணன்:* வாழும் காலத்தில் நித்திய தேகத்தில் குடியேறி வாழவும், நசிகேதன் எமனிடம் பெற்ற வரம் பற்றிக் கூறுவதுமே கடோபநிஷத். பெரியோரின் வாக்கெனும் தீயாகிய யாகத்தின் மூலம் எம பயம் கடந்து அவரவரிடம் உள்ள ஆன்மப் பொருளை தரிசிப்பதே ஜென்ம சாபல்யமாகும்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரி பானுரியாஸ்:* மறுமையை தேடும் உள்ளம் உள்ளவரே இம்மையிலும் மறுமையிலும் வெற்றி பெறுவர் என்கிறது ஹதீஸ். புற உலக ஆசாபாசம் விட்டு தொழுகையில் நாட்டம் கொள்வதே மறுமை செல்வதற்கான வழி. ஆசான் தயவால் பழகும் சாகாக் கல்வியே மெய்க் கல்வியாகும்.

*ஜீவசகோதரி அகிலாதேவி:* நாற்றமுள சிப்பியுள் விளையும் முத்து போல் அழி தேகத்துள் அழியாப் பொருள் விளைய அருள்பவரே குரு. **இதயமெனும் இடமொன்றுண்டு எங்குமில்லை உன்னுள் தான் காண்க** என்கிறார் சிவவாக்கியர். மனிதனின் ஓய்விலா புனலூரிய புனற்றுறை கோயிலே இதய தடாகமான ஃ எனும் பிரம்மம். குருவருளால் மனம் அலைவின்றி பத்மாசனமிட்டு முத்தாபம் தீர்ந்து இதயத் தாமரை மலர்ந்து அங்கு இறைவனை தரிசிப்பதே மெய்வழியாகும்.

*ஜீவசகோதரி சண்முகப்பிரியா:* பரமனே குருவாக வந்து மனமாகிய எமனின் பிடியில் இருந்து நம்மை மீட்கிறார்கள். நாம் அறம் செய்வதற்கும் அறிவின் வழி செல்வதற்கும் அருந்துணை ஆசானின் நாதமே.

*ஜீவசகோதரி மகாலட்சுமி:* ஆசான் தயவால் அறிவை அறிந்து அனுபவிப்பதே இன்பம். அறியாமை எனும் இருளே கலியுகம். நம் தேகத்தில் பொய் மெய்யும் பிரித்துக் காட்டி பிறப்பறுக்கும் பிஞ்சகனே ஆசான்.

*ஜீவசகோதரர் கார்த்தி:* பயம் தரும் இருளே அபயம் தரும் அருளாக மாறுவது குருவின் தயவால் தான். ஆதாரம் ஏதுமின்றி அகிலமெங்கும் ஆட்சி செய்யும் இருளை அறிய குருவின் அருள் வேண்டும். அணு குண்டு வெடிப்பின் அதிர்வையும் அடக்க வல்லது இருள். ஒரு பொருளின் எடையை நிர்ணயம் செய்யும் காலம் போல், காலம் கடந்த ஒரு பொருளை அறிந்து அதனுடன் இரண்டறக் கலக்கச் செய்வது ஆசானின் அருளமுதமே.

ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

*அஞ்ஞானமாகிய திமிரத்தால் குருடானவளும், விஷயத்தினா விழுக்கப்பட்ட சித்தமுடையவளுமாகிய எனக்கு ஞானப் பிரபையைக் கொடுக்கும் தங்கள் திருவருள் பிரசாதத்தைச் சதா வழங்கும்படிப் பிரார்த்திக்கின்றேன்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

**இசை வகுப்பு**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**07-12-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ நாயகன் இல்லம்**

பிரம்மோதய சாலை ஆண்டவர்கள் அருளிய **முடியாகிய மூமீனென...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது. பத்தியத்திடம் பாடலின் காப்பு மற்றும் பாடல்களும் குருபிரான் வழி காட்டுதலுடன் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

**14-12-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ நாயகன் இல்லம்**

பிரம்மோதய சாலை ஆண்டவர்கள் அருளிய **வாஞ்ஞாலிப் பழம் புலமை...** என்ற ஆடலங்ஙன்னி காப்பு மற்றும் பாடல்களுடன் அவை உதயமானது. தொடர்ந்து ஆடலங்ஙன்னி பாடல்களே பயிற்சிப் பாடலாக ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

**21-12-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ நாயகன் இல்லம்**

பிரம்மோதய சாலை ஆண்டவர்கள் அருளிய பூரணப்புதையல் பாடலில் இருந்து **தன்னேழின்னபுசின்புற மேவுற...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது. ஆடலங்ஙன்னி பாடல் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

**28-12-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ நாயகன் இல்லம்**

வள்ளல் பிரான் அருளிய **தாயாகித் தந்தையுமாய்...** என்ற பாடலுடன் அவை உதயமானது. **மெய்ஞ்ஞானப் பகுப்பு** பாடலில் **எது வேணும் கேளும் சிங்கா...** என்ற பாடல் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அதன் பொருளும் குருபிரானால் அருளப்பெற்று அவை இனிதே நிறைவானது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!

*எவரது பிரகாசத்தினால் 'யானே எல்லாம், என்னிடத்திற்குள்ளே யாவும் உள்ளன' என்றிவ்வாறு சத்தாகிய ஆத்ம வடிவமானது அறிவிக்கப் பெறுகிறதோ, அவரது பாத தாமரையைத் தினமும் பணிகின்றேன்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2025 டிசம்பர் மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 40**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கு ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai 

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Vijayakumar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 54 – Month: January 2026*